# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2042/12 – 2017 ඔක්තෝබර් මස 24 වැනි අඟහරුවාදා – 2017.10.24

*2042/12 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை நிலஅளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு வினைத்திறன் காண் தடை**

**தொடர்பான (ஆ) பின்னிணைப்பில் திருத்தம் மேற்கொள்ளல்**

*2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 1434/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மற்றும் 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிய 1482/17 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதிய 1509/15 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1623/13 ஆம் இலக்க, 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதிய 1654/ 13 ஆம் இலக்க மற்றும் 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 1675/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளின் மூலம் திருத்தப்பட்ட இலங்கை நிலஅளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளாறு திருத்தப்படுதல் வேண்டும்.*

(ஆ) பின்னிணைப்பு

***2* ஆவது வினைத்திறன் காண் தடை :**

*வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்கள் 7ஆவது சம்பளப் படிமுறைக்கு வருவதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடப் பரப்பினைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையாகிய 2 ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

1A - PG3732 - 107 (2017/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு வினாப்பத்திரங்களுக்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | காணிச் சட்டம் மற்றும் காணி அளத்தல் | 3 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. | வெளிக்கள நிலஅளவை முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

1. காணிச் சட்டம் மற்றும் காணி அளத்தல் - காணிச் சட்டம், காணி நிருவாகம், நவீன நில அளவை தொழில்நுட்பம் மற்றும் நில உடைமை (கடஸ்திரல்) அளவை தொடர்பான ஒரு வினாப்பத்திரம்.

2. வெளிக்கள நிலஅளவை முகாமைத்துவம் - முகாமைத்துவம் மற்றும் அலுவலக மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தொடர்பான ஒரு வினாப்பத்திரம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 177, நாவல வீதி,
நாரஹேன்பிட்ட,
கொழும்பு 5,
2017, ஒற்றோபர் 19.

11-435

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.